# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## கலை கலாசார பீடம்

## மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு

## 2012/2013 (June/July 2017)

S 3143 விவசாயமும் காடாக்கமும் (Agriculture and Forestry)

ம்: 03 மணித்தியாலங்கள்

த்து தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

ப்பான்கள் பயன்படுத்த அனுமதி வழங்கப்படும். வரைபடத்தாள் (Graph Sheet) வழங்கப்படும்.

யேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

1. அ) விவசாயப் புவியியல் தொடர்பான பின்வருவோரின் வரைவிலக்கணங்களை தருக.

   I. Bernhard

   II. Hillman

   III. Johnston

   IV. Andreae

   (4x2= 8 புள்ளிகள்)

   ஆ) விவசாய நடவடிக்கையினைத் தீர்மானிக்கும் காரணிகளைப் பட்டியறப்படுத்தி, அதில் சமூக, பொருளாதார, அரசியல் காரணிகள் எந்தளவுக்குச் செல்வாக்குச் செலுத்துகின்றன என்பதனை விபரிக்குக. (17 புள்ளிகள்)

2. அ) உலகில் உணவு நெருக்கடி ஏற்படுவதற்கான காரணங்களை விபரிக்குக. (10 புள்ளிகள்)

   ஆ) "உலக உணவு நெருக்கடியினால் (World Food Crisis) எதிர்காலத்தில் பல்வேறுபட்ட சவால்களை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்" இக்கூற்றினை ஏற்றுக் கொள்கின்றீரா? விளக்குக. (15 புள்ளிகள்)

3. அ) காடாக்கம் என்றால் என்ன? காடாக்கத்தினால் ஏற்படும் நன்மைகள் பற்றி விபரிக்குக. (06 புள்ளிகள்)

ஆ) காடாக்க நடவடிக்கையில் பெண்களின் ஈடுபாடு எவ்வகையில் செல்வாக்குச் செலுத்துகின்றது என்பது தொடர்பாக கருத்துரைக்குக. (06 புள்ளிகள்)

இ) கிராமிய பொருளாதாரத்தில் காடாக்கத்தின் பங்களிப்பு பற்றி சுருக்கமாக விளக்கு (13 புள்ளிகள்)

4. அ) வொன்தியூனன் (Von Thunen) விவசாய இடவமைவுக் கோட்பாட்டிற்காக வடிவமைத்த மாதிரி வலயத்தை வரைந்து காட்டி, ஒவ்வொரு வலயத்திலும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி விளக்குக. (08 புள்ளிகள்)

ஆ) இரண்டுவகை நிலப்பயன்பாடுகள் மற்றும் அவற்றோடு தொடர்பான கற்பனைசா தரவுகள் அட்டவணை I இல் தரப்படுகின்றது. இத்தரவுகளைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அட்டவணை I நிலப்பயன்பாட்டுத் தரவுகள்

| ஹெக்ரேயர் ஒன்றிற்கான உள்ளீடு, வெளியீடுகள் | | நிலப்பயன்பாடுகள் | | அலகு ஒன்றிற்கான விலை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| | | உருளைக் கிழங்கு | கரட் | |
| உள்ளீடுகள் | ஊழியம் (மனித மணி.) | 50 | 80 | 200 |
| | உரம் (Kg) | 1200 | 600 | 15 |
| | இயந்திரம் (இயந்திர மணி.) | 40 | 30 | 100 |
| வெளியீடுகள் | உற்பத்தியளவு (Kg) | 7500 | 7000 | |
| | சந்தைவிலை (ரூபாய்) | 10 | 8 | |
| ஒரு Km இற்கான போக்குவரத்துச் செலவு | | 0.40 | 0.25 | |

i. இரு நிலப்பயன்பாடுகளுக்குமான உற்பத்திச் செலவு, தூரம், வருமா என்பவற்றைக் கணிக்குக. (06 புள்ளிகள்)

ii. நிலப்பயன்பாடுகளுக்கான எல்லையினைக் கணித்து எல்லை வரைபடத்தி வரைந்து காட்டி விபரிக்குக. (11 புள்ளிகள்)

5. “விவசாய நடவடிக்கையில் புகுத்தப்பட்டுள்ள புதிய தொழிநுட்பங்கள் பல்வேறுபட்ட பிரச்சினைகளை ஏற்படுத்துவதனால் இன்று நவீன பேண்தகு ரீதியிலான விவசாயம் மீளுருவாக்கம் பெற அவசியமாகின்றது” இக் கருத்தினை ஏற்றுக்கொள்கின்றீரா? உதாரணங்களுடன் விளக்குக. (25 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் யாதாயினும் **இரண்டினிற்கு** விளக்கக்குறிப்புரை எழுதுக.

அ) பெயர்ச்சிப் பயிர்ச் செய்கையும் அதனால் ஏற்படும் விளைவுகளும்

ஆ) இலங்கையின் விவசாயத்துறை விருத்தியில் அரசாங்கத்தின் பங்களிப்பு

இ) எதிர்கால உணவுத்தேவையினை நிறைவு செய்வதில் உணவுப்பாதுகாப்பின் முக்கியத்துவம்

(12½ x 2 = 25 புள்ளிகள்)